DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.214/2025**

Prosecution **PW.2**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | ராமராஜ் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | செல்வராஜ் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.02.2026

1, 2 எதிரிகள் ஆஜரில்லை. சட்டப்பிரிவு 355 BNSS படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் திருவாரூர் மாவட்டம், கண்கொடுத்தவனிதம் என்ற ஊரில் குடியிருந்து தமிழ்நாடு அரசு போக்கு வரத்துக்கழக்கத்தில் டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 தெரியும். 13.10.2019 அன்று காலை 11.05 மணிக்கு மன்னார்குடி – திருப்பூர் செல்வதற்காக tN 68 N 0956 என்ற பேருந்தில் நான் டிரைவராகவும் அ.சா.1 நடத்துனராக பணியில் இருந்தோம். குளித்தலை சுங்கசாவடியில் ஆனந்தக்குமார் பேருந்தில் ஏறி பஸ்ஸின் படிக்கட்டில் நின்று கொண்டு போன் பேசிக்கொண்டு வந்தார்.

2. நடத்துனர் படியில் இருந்து மேலே ஏறிவரச்சொன்னார். அதற்கு எதிரி ஆனந்தக்குமார் தேவடியா மவனே என்று தகாத வார்த்தையால் திட்டினார். மாலை 03.45–04.00 மணியளவில் லாலா'பேட்டை பேருந்து நிறுத்தத்தில் பேருந்தில் இருந்த பயணிகளை இறக்குவதற்கு பேருந்தை நிறுத்தினேன். அப்போது அ.சா.1 ன் சட்டையை பிடித்து இழுத்து கீழே கிடந்த கல்லை அ.சா.1 பின் தலையில் அடித்துவிட்டார். அதில் அவருக்கு வீக்கக்காயம் ஏற்பட்டது.

4. பின்பு மாயனூர் காவல் நிலையத்திற்கு, ஓட்டுநர், பயணிகள் அனைவரும் நானும் சென்று புகார் கொடுக்க சென்றபோது காவல் நிலையத்தில் இது எங்கள் லிமிட் இல்லை எனவே லாலாப்பேட்டை காவல் நிலையத்தில் சென்று புகார் கொடுக்கச்சொன்னார்கள். பயணிகளை மாற்று பேருந்தில் ஏறி அனுப்பி விட்டு நானும், ஓட்டுநரும் லாலாப்பேட்டை காவல் நிலையத்திற்கு சென்று அ.சா.1 புகார் கொடுத்தோம். பின்பு குளித்தலை கிளையில் வேலைசெய்யும் குமார் என்பவர் அ.சா.1 ஐ குளித்தலை GH க்கு அழைத்துச்சென்றார்.

5. அங்கு முதலதவி சிகிச்சை எடுத்துக்கொண்டு அங்கிருந்து மேல் சிகிச்சைக்கா திருச்சி GH க்கு Refer செய்தார்கள். அ.சா.1 தஞ்சாவூர் GH க்கு பரிந்துரைக்குமாறு கேட்டார்.. அதற்கு திருச்சிக்கு தான் அனுப்புவேன் என்று கூறினார்கள். எனவே திருச்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேரவில்லை. தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைகாக சேர்ந்தேன். எதிரிகள் ஆனந்தக்குமார், தினேஷ் இருவரையும் பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.17 11:07:04 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.